சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.125/2021</u>

24.09.2025

பி.வா.சா.1 திரு. குருமூர்த்தி, த/பெ. ரெத்தினம்பிள்ளை

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா சொத்திற்கு 1903 ல் பட்டா வாங்கினேன். எனது பிறந்த தேதி 01.11.1945. சாட்சி மீண்டும் தன்னிச்சையாக 1993 ல் பட்டா வாங்கப்பட்டதாக பதிலளிக்கிறார். என் பெயரில் பட்டா வாங்கும் போது ரத்து செய்வதற்கு ராஜேந்திரன் மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. வருவாய் கோட்டாட்சியர் எனக்கு வழங்கிய பட்டாவை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. ஆர்டிஓ அலுவலகத்தில் என்னை அழைத்து விசரிக்கவில்லை. ஆர்டிஓ உத்தரவின் பேரில் டிஆர்ஓவிடம் மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். டிஆர்ஓ, ஆர்டிஓ உத்தரவை மேல்முறையீடை ரத்து செய்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணம் தான் அந்த உத்தரவு என்றால் சரிதான். டிஆர்ஓ பிறப்பித்த உத்தரவை எதிர்த்து வா.சா.ஆ.16 ன் படி மேல்முறையீடு செய்தேன் என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்குமாறு உத்தரவு பிறப்பித்தார்கள் என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் வாதி சுவாதீன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு நான் மன்னார்குடி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பட்டாவின் அடிப்படையில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்தை பொறுத்து எனக்கு வழங்கப்பட்ட பட்டாவை வருவாய்துறை அதிகாரிகள் ரத்து செய்துள்ளதால் எனக்கு வழக்கு சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. பட்டாவை தவிர எனக்கு உரிமை மூல ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் மணியன்செட்டியார், கல்யாணசுந்தரம், கழுவையன், நடராஜன் ஆகியோர்கள் கையொப்பம் போட்டுக்கொடுத்துள்ளார்கள். மேற்படி நான்கு பேரும் திருவிடைவாசலை சேர்ந்தவர்கள் ஆவார்கள். வா.சா.ஆ.16 ஆவணத்தில் நான்கு நபர்களின் தகப்பனார் பெயர், முகவரி குறிப்பிபடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் ராஜேந்திரன் எந்த ஆவணமும் எனக்கு

எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் அந்தஆவணத்தில் உள்ள கையெழுத்து ராஜேந்திரனுடையது இல்லை என்றால் சரியல்ல. நான் ராஜேந்திரன் எழுதிக்கொடுத்ததாக சொல்வதை நிரூபிப்பதற்கு ஏதாவது ஆவணம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. 2 ஆம் பிரதிவாதி வழக்கை மேல்நடத்திவருகிறாரா என்றால் ஆமாம். 2 ஆம் பிரதிவாதி வழக்கை மேல்நடத்தவில்லை என்றாலும் நான் தான் அவருக்காக புதிதாக கட்சி செய்துவருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் மன்னார்குடி நீதிமன்றத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் இந்த வழக்கில் வாதி கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டை காலி செய்து வாதிக்கு சுவாதீனம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்குண்டான உரிமைமூல ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆவணம் அனுப்பப்பட்டது என்பதை காட்ட அஞ்சல் ரசீதோ, ஒப்புகை அட்டையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.